* 431 வினா—திரு. சு. துரைசாமி: மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஒரு லட்சத்திற்கு அதிகமான மக்கள் தொகையுள்ள திருப்பூரில் ஒரு காவலர் நிலையம் உள்ளது போதாது என்றும் இரண்டு காவலர் நிலையங்கள் ஏற்படுத்தவேண்டும் என இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (I.G.) அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளாரா ?

(இ) ஆம் எனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

* 432 வினா—திரு. பெ. மலைச்சாமி : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மேலூர் வட்டம், செந்துறையில் ஒரு புதிய காவல் நிலையம் (Police Station) அமைக்க ஏதேனும் செயற் குறிப்பு உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது அமைக்கப்பெறும்?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

அரசினர் கைரேகைப் பதிவுக் கழகம்

* 433 வினா—திரு. மா. பா. சாரதி : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழக அரசாங்க கைவிரல் ரேகை பதிவு அலுவலகம் பற்றி மதிப்பீடு கமிட்டி (Estimate Committee) ஆய்வுரை, பரிந்துரை வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) ஆம்.

(இ) மதிப்பீட்டுக் குழுவின் (1963-64) பரிவுரைகளை ஒட்டி சென்னைப் போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல், வேலூர் கைரேகை பதிவுக் கழகப் பணியாளர்களின் சம்பள விகிதத்தை மாற்றியமைக்கச் செயற்குறிப்புகளை அனுப்பினர். அவை நீண்ட ஆய்வுக்குப்பின் மறுக்கப்பட்டன.

திரு. மா. பா. சாரதி : கைரேகைப் பதிவு நிலையம் நீண்ட நாட்களாக வேலூரில் இருப்பதாலும், பலர் அங்கேயே வசிப்பதாலும், அதை வேலூரில் இருந்து மாற்றாமல் இருப்பதற்கு,